மின்னிதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

மலர்: 02 | குரல்: 122 | வள்ளுவர் ஆண்டு 2054 | புதன்கிழமை 03.01.2024 | பக்கங்கள் 12




## ஒற்றுமையை விரும்பாத சுமந்திரன் மற்றும் சிறீதரன்! தலைமை பொறுப்புக்கு தகுதியற்றவர்கள்!

### விந்தன் கனகரட்ணம் தெரிவிப்பு!

பக்கம் 3

## உலகத் தமிழர் பேரவையின் ”இமயமலைப் பிரகடனம்” அமரபுர நிகாயவினால் நிராகரிப்பு!




பக்கம் 10

## மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கு. 7225 பேர் பாதிப்பு!!





பக்கம் 8

## போதைப்பொருள் தடுப்பு விவகாரம்! ஜனாதிபதி வழங்கியுள்ள பணிப்புரை!



பக்கம் 7

## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ் மாவட்ட இணைப்பாளர்கள் தெரிவு!



பக்கம் 4

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் 05 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி

# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## நல்லிணக்க சுயாதீன ஆணைக்குழு

அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலைமாறுகால நீதி மற்றும் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது இந்த ஆணைக் குழுவின் நோக்கமாக இருக்கிறது.

இந்த சுயாதீன ஆணைக்குழுவை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நிறுவவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுகளில் இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகம் இவ் ஆணைக்குழுவை அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளின் ஒரு படியாக பிரதானமான பங்குதாரர்களுடனான சந்திப்புக்களை நடத்திவருகின்றது. அதன் பின்னர் சட்ட மூலம் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து கருத்துகளைப் பெறும் வேலைத்திட்டம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படஉள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் வடக்கு கிழக்கு மக்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்கான தீர்வுகளை எதிர்பார்த்து பல போராட்டங்களை நடத்தியதுடன் கோரிக்கைகளையும் விடுத்திருந்தனர். ஆனால் அவை எவற்றுக்கும் நியாயமான தீர்வுகள் எதுவும் எட்டப்படவில்லை.

இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போன்ற ஜனாதிபதி ஆணைக்குழுக்களிடம் மக்கள் தங்கள் எதிர்பார்ப்புக்களை முன்வைத்திருந்தனர். எவ்வித பலனும் அவற்றினால் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலையில் இலங்கைப் பிரஜைகளின் முறைப்பாடுகள் தொடர்பில் உண்மையை உறுதி செய்யும் வகையில் நல்லிணக்கம், இழப்பீடுகள் மற்றும் நிலையான அமைதிக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக இந்த ஆணைக்குழு அமைக்கப்படுகிறது.

பல தசாப்தங்களாக மக்கள் எதிர்கொண்ட மோதல் சூழ்நிலைகளில் அவர்களை ஆதரப்பதற்கோ, அவர்களின் இன்னல்களை குறைப்பதற்கோ முயற்சிக்காத நிலையில், தற்போது அவற்றிலிருந்து மீள்வதற்கு உண்மையைத் தேடுவதற்கு உள்ள உரிமையை அங்கீகரிக்கும் வகையில் ஆணைக் குழு நிறுவப்படுகிறது.

இலங்கையில் தேசிய ஒருமைப்பாடு, சமாதானம், சட்டத்தின் ஆட்சி, சகவாழ்வு, சமத்துவம், சகிப்புத் தன்மை, பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுதல் என்பன முக்கியமானதாக இருக்கின்ற போதிலும் அவற்றுக்கு யார் பொறுப்பு என்பதே யாருக்கும் தெரியாத விடயமாகும்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கில் நடைபெற்ற யுத்தம் அதனால் ஏற்பட்ட விளைவுகள், அழிவுகள், இழப்புக்கள் கணக்கிலடங்காதவைகளே. 2009 இறுதி யுத்தத்தின் போது மக்கள் எண்ணிக்கை ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலும் அதற்கு வேறு ஒரு அளவு அறிவிக்கப்பட்டதே வரலாறு.

இவ்வாறிருக்கையில் இலங்கையின் பல்லின சமூகங்களிடையே இருக்கின்ற இணக்கப்பாடு, பொருத்தப்பாடின்மையை களைந்து எதிர்காலத்தில் முரண்பாடு ஏற்படாத வகையில் இந்த அணைக் குழு செயற்படுமா என்பது கேள்வியே.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் யுத்தத்துக்குப் பின்னர் நிறுவப்பட்ட நல்லிணக்க முயற்சிக்கான ஆணைக் குழுக்களின் பரிந்துரைகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை. இன முரண்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கவனத்திலெடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் நல்லிணக்க முயற்சிகளுக்கான பரிந்துரைகள் மீளாய்வு செய்யப்படுவதும் பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த இந்த ஆணைக்குழு முயற்சி செய்யுமா என்பது தெரியாததே.

எதற்கும் உத்தேச புதிய சட்டம் அமுலுக்கு வரட்டும், உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் செயற்படத் தொடங்கட்டும். அதற்காக அரசாங்கம் நடவகடிகை எடுக்கட்டும் என்று இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி கைவிடப்படாதிருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் மனங்களில் வரலாறாக பதிவு செய்யப்பட்டுள்ள நம்பிக்கையீனங்களுக்கு அமையவுள்ள ஆணைக்குழு மருந்து கொடுக்குமா அல்லது அரசியல் தலையீடு, ஆதிக்கத் தலையீடுகளுக்கு மத்தியில் பக்கச்சார்பின்றி நீதி, நியாயத்துடன் நின்று பிடிக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.



# அரசு அத்தியாவசியப் பொருட்களுக்கான வரியினை நீக்க வேண்டும்-விந்தன் கனகரட்ணம் தெரிவிப்பு!



அத்தியாவசியப் பொருட்களுக்கான வரியினை மீளாய்வு உட்படுத்தி நீக்குவதற்கான நடவடிக்கை செய்ய வேண்டும் என முன்னாள் வட மாகாண சபையின் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கேட்டுக் கொண்டுள்ளார்.யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று (2.1.2024) நடைபெற்ற ஊடக சந்திப்பிலே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.மேலும் தெரிவிக்கையில், புதுவருடம் தொடங்கி புதுவருட அன்றே மக்க ளுக்கு இலங்கை அரசாங்கம் பேரதிச்சியினை ஏற்படுத்தியிருக் கின்றது. 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் முதலாம், இரண்டாம் வாசிப்பிலே சமர்ப்பிக்கப்பட்ட விடயத்தில் உண்மைகளை முடிமறைத்து 97 பொருட்களின் விலைவாசி உயர்த்தியிருக்கின்றது. இவ்வருடத்திலே இலங்கை வாழ்மக்கள் மீது பெரும் வரிச்சுமையினை அரசு செலுத்தியுள்ளது. குறிப்பாக வரிக்குள்ளே மதுபானம், புகைத்தல், ஆடம்பர, இலத்திரனியல் பொருட்களுக்காக பொருட்களுக்கு விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும் அத்தியாவசிய பொருட்களுக்கு விலை உயர் வடைந்திருப்பது பேரதிர்ச்சியினை ஏற்படுத்தியிருக் கின்றது.

கடந்த 30 வருடம் யுத்த நடந்த போதிலும் கூட இப்படியான வரி அதிகரிக்கப்படவில்லை. விலை வாசியும் அதிகரிக்கப்படவில்லை. பொருட்தட்டுப் பாடு ஏற்படவில்லை.30 வருட யுத்தத்திலும் கூட பல்லாயிரம் ரூபாய்களை செலவளித்த இவ்வர சாங்கம் 30 வருட யுத்தம் முடிந்த பிற்பாடு 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வளவு வற் வரியிலான சுமையினை மக்கள் மீது சுமத்தி யுள்ளது.எற்கனவே இருந்த அரசாங்கங்களும் ஊழலுக்கு, மோசடிக்கு, துஸ்பிரயோகத்திற்கு பெயர்போன அரசாங்களுக்கு இருந்தது. மக்களால் விரட்டப்பட்ட அரசாங்கமாக காணப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மக்கள் ஆதரவு பெறமால் நாடாளுமன்ற பெரும்பாண்மையினை பெற்றுக்கொண்டு வந்து ஜனநாயக விரோத பாதீட்டினை நிறைவேற்றியுள்ளார்.குறிப்பாக அத்தியாவசிய பொருட்கள் மீதான வரி அதிகரிப் பானது ஏழை மக்கள், அன்றாடம் கூலித்தொழினை செய்வர்கள், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், மலையக மக்களது வயிற்றில் பேரிடியாக காணப்படுகின்றது. இவ் பாதீட்டினை சமர்ப்பித்து, மக்களுக்கு எந்த பயனும் இல்லாது வாட்டிவதைக்கின்ற அரசாங் கமாக மாறியுள்ளது.பாதீடு தொடர்பாக குரல்கொடுக் கின்றார்கள். நாடாளுமன்றத்தில் பேசக்கூடிய விடயங்களை பேசாமல், தடுத்து நிறுத்தவேண்டிய விடயங்களை தடுத்து நிறுத்தாமல், பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்கமாலும் இருந்துகொண்டு தற்போது வெளியில்வந்து மக்கள் மீது பாதீடு தொடர்பாக குரல் கொடுக்கின்றார் கள்.அரசாங்கம் வரிசலுகை தொடர்பாக மீளாய்வு செய்ய வேண் டும். உடனடியாக அத்தியாவசியப் பொருட்களுக் கான வரியினை மீளாய்வு உட்படுத்தி நீக்குவதற் கான நடவடிக்கை அரசு செய்யவேண் டும்.

# ஒற்றுமையை விரும்பாத சுமந்திரன் மற்றும் சிறீதரன்! தலைமை பொறுப்புக்கு தகுதியற்றவர்கள்..?



**தமிழரசு கட்சியின் தலைமை வேட்பாளர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் சிறீதரன் இருவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை விரும்பாதவர்கள் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினரும் ரெலோவின் நிதிச் செயலாளருமான விந்தன் கனகரட்னம் தெரிவித்தார்.**

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சியின் தலைவர் யார் என்பது அவர்களுடைய கட்சி தீர்மானித்துக் கொள்ளட்டும். ஆனால் இவர்கள் இருவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு எதிராகச் செயற்பட்ட வர்கள். பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடர்பில் நான் அதிகம் கூற வேண்டிய தேவை யில்லை. பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் 2018 ஆம் ஆண்டு பிரதேச சபை தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவிப்பின் போது மூன்று பிரதேச சபைகளில் சக காட்சிகளுக்கு ஆசனம் வழங்க மறுத்து விட்டார்.

தான்தான் கிளிநொச்சி நாட்டாமை என நினைத்து தனது ஆதரவாளர்களையே வேட்பாளராக்க வேண்டும், சக தமிழ் கட்சிகளின் வேட்பாளர்க ளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என நினைப்பவர் எவ்வாறு ஒற்றுமையை விரும்புவார். தமிழரசு கட்சியினுடைய தற்போதைய தலைவராக இருக்கும் மாவை சேனாதிராஜா உண்மையிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என விரும்புபவர். ஆகவே சக தமிழ் கட்சிகளுடன் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக,

தமிழ் மக்களின் குரலாக ஒளிப்பவர்கள் தான் தலைமை பதவியில் இருக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்து என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ் மாவட்ட இணைப்பாளர்கள் தெரிவு.!

(D.T.N.A)



ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் 05 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றின் கட்சித் தலைவர்கள், கூட்டணியின் இணைத் தலைவர்களாகவும், கட்சிக்கு ஓர் செயலாளரும், பேச்சாளரும், பொருளாளரும்,தேசிய அமைப்பாளரும்,துணைத்தேசிய அமைப்பாளரும் நியமிக்கப்பட்டு பதினைந்து (15) பேர்கள் கொண்ட கட்சிக்கான உயர் பீடம் ஒன்று முன்னரே உருவாக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கட்சியின் நிர்வாக கட்டமைப்பை மாவட்டங்கள் ரீதியாக விஸ்தரிக்கும் முதற்கட்ட செயற்ப் பாடாக கூட்டணியின் யாழ் மாவட்ட இணைப்பாளர்கள் தெரிவானது நேற்றைய தினம் 02/01/2024 யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன் பிரகாரம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சியில் இருந்தும் தலா மூன்று பேர் வீதம் மாவட்ட இணைப்பாளர்களாக மொத்தம் பதினைந்து பேர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் கூட்டத்தில் எதிர்கால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், இன்று எம் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சனைகள் தொடர்பாகவும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை மாவட்ட ரீதியில் அரசியல்,பொருளாதார,நிர்வாக ரீதியாக கட்சியைப் பலப்படுத்துவது !தொடர்பிலும் ஆரோக்கியமான முறையில் கலந்துரையாடி தீர்மானமாக்கப்பட்டது.


# 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வரி எண்: விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை!




வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் 50,000 ரூபா அபராதம் விதிக்கப் படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 18 வயதுக்கு மேற்பட் டவர்களின் வரி எண்களை பதிவு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. இது தொடர்பான அறிவிப்பில் மேலும், வரி எண்ணை பதிவு செய்வது தொடர்பான விண்ணப்பத்தை அதன் இணையதளத்தில் சென்று பூர்த்தி செய்து கொள்ள லாம். மதிப்பீட்டு ஆண்டிற்கு 1,200,000 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் அனைவரும் வரிக் கோப்பைத் திறக்க வேண்டும். ஒரு வருடத்தின் ஏப்ரல் 1ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையி லான காலம் மதிப்பீட்டு ஆண்டாகக் கருதப்படுகிறது.

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் 50,000 ரூபா அபராதம் விதிக்கப்படும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.பதிவு செய்துக் கொள்ளாதவர்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பதிவு செய்யும் எனவும் இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

# 2024:வெற்றி ஆண்டா! தோல்வி ஆண்டா!




கடந்த 24ஆம் திகதி இரவு பதினோரு மணிக்கு அதாவது நத்தார் பிறப்புக்கு முன், மட்டக்களப்பில் ஒரு சோகமான சம்பவம் இடம்பெற்றது.42 வயதான ஒரு குடும்பஸ்தர் கல்லடி பாலத்தில் இருந்து வாவிக்குள் குதித்து தற்கொலை செய்ய முயற்சித்தார்.ஆனால் நீரில் மூழ்கத் தொடங்கியதும் சாகப் பயந்து பாலத்தின் தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு தத்தளித்திருக்கிறார்.படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் அவரைக் காப்பாற்றினார்கள்.போலீஸ் அவரை தற்கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்திருக்கிறது. அவர் ஒரு ஏழை மேசன்.ஐந்து பிள்ளைகளின் தந்தை.கட்டிடப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால்,அவருக்கு தொழில் இல்லை.நத்தார் சீசனை முன்னிட்டு ஆடைகள் வாங்கக் காசு இல்லை. வீட்டில் மனைவி நச்சரித்திருக்கிறார்.எனவே, வாழ்க்கை வெறுத்துப்போன அக்குடும்பத் தலைவர்,இயேசு நாதர் பிறந்த நாள் எனது இறந்த நாளாக அமையட்டும் என்று கூறி பாலத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முயற்சித்திருக்கிறார். இயேசு பிறப்பை தனது இறப்பாக அறிவிக்கும் அளவுக்கு ஒரு ஏழை கிறிஸ்தவரை வறுமை தாக்கியிருக்கிறது.இதுதான் நாட்டில் ஆண்டு இறுதி நிலவரம்.

நாட்டில் நத்தார் மரத்தின் விலையை வைத்து நாட்டின் பொருளாதாரத்தை மதிப்பிடலாம்.டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் ஒன்றரை அடி உயரமான ஒரு நாத்தார் மரம் கிட்டத்தட்ட 3500 ரூபாய்க்கு விற்கப்பட்டது.எனினும் ஒரு கிழமைக்கு பின் சுமார் 4 அடி உயரமான நத்தார் மரம் 6000 ரூபாய்க்கு வந்தது. ஆனால் முட்டை விலை குறையவில்லை. கூடியது.ஒரு மூட்டை 60ரூபாய். இம்முறை பெரும்பாலான எழைகளின் வீடுகளில் கேக் இல்லாத கிறிஸ்மஸ்தான்.

முட்டை விலை மட்டுமல்ல பச்சை மிளகாய், தக்காளி உள்ளிட்ட அனைத்து மரக்கறிகளின் விலைகளும் உயர்ந்து விட்டன.வழமையாக கிறிஸ்மஸ் சீசனில் மரக்கறி விலைகள் உயர்வதுண்டு.தைப் பிறப்போடு குறைவதுண்டு. ஆனாலும் இம்முறை விலை உயர்வு அசாதாரணமாகக் காணப்பட்டது. பச்சை மிளகாய் ஒரு கிலோ 1400 ரூபாயிலிருந்து 2000 ரூபாய்வரை போனது.வெங்காயம் தக்காளியின் விலைகளும் அதிகம். சிங்கள யூ டியூப்பர்கள் மரக்கறி விலை உயர்வைக் காட்ட சில வேடிக்கையான காணொளிகளை வெளியிட்டார்கள்.அதில் ஒரு காணொளியில் ஒரு பச்சை மிளகாயை நூலில் கட்டி கறிக்குள் போடுகிறார்கள். கறி காய்சியதும் அதை எடுத்து மற்றொரு கறிக்குள் போடுகிறார்கள். வேறு ஒரு காணொளியில் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் ஒரு பக்கம் இன்னொரு பக்கம் ஒரு தக்காளிப் பழம் மட்டும். அதாவது ஒரு தக்காளி பழத்தின் பெறுமதிதான் ஐந்தாறு பச்சை மிளகாய்கள் என்று பொருள்.இப்படித்தான் இம்முறை நாட்டில் ஆண்டிறுதி அமைந்தது.

இந்த லட்சணத்தில் அடுத்த ஆண்டு நெல் உற்பத்தி பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் எச்சரிக்கிறார்கள்.நெற் பயிர்களைத் தாக்கும் வெள்ளைத் தத்தியை அழிப்பதற்கு விவசாயத் திணைக்களம் முயற்சிக்கவில்லை என்றும் அதனால் விளைச்சல் பாதிக்கப்படலாம் என்று விவசாயிகள் கூறுகிறார்கள். அதாவது பழைய ஆண்டு நல்ல செய்திகளோடு முடியவில்லை. புதிய ஆண்டும் நல்ல செய்திகளோடு பிறக்கவில்லை என்று பொருள்.

புதிய ஆண்டில்,அரசாங்கம் வற் வரியை அதிகரிக்க உள்ளது.இருபது ஆண்டுகளில்,ஆகப்பெரிய வரி அதிகரிப்பு இது.புதிய ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிந்து வரிசெலுத்துனர் அடையாள இலக்கத்தை வைத்திருப்பது கட்டாயமாகும்.அவ்வாறு பதிவு செய்யாதிருப்பது 50,000 ரூபாய்க்குக் கூடாத அபராதத்தை விதிக்கக்கூடிய தண்டனைக்குரிய குற்றம் என்று ஒரு செய்தி சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பரவி வருகிறது

புதிய ஆண்டு வரி அதிகரிப்பின் ஆண்டாக மட்டும் அமையப் போவதில்லை. அது ஒரு தேர்தல் ஆண்டாகவும் அமையப் போகின்றது என்பதுதான் இலங்கைத் தீவின் அரசியல் அவலம்.ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசு கட்சிக்குள் தலைவர் யார் என்பதற்குத் தேர்தல் நடக்கும்.ஆண்டின் இறுதியில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல்.ஒரு தேர்தலில் தொடங்கி மற்றொரு தேர்தலில் முடியப்போகும் ஆண்டு.

நாடு இப்போதுள்ள நிலையில்தமிழரசியல் இப்போதுள்ள நிலையில் தமிழரசுக் கட்சிக்குள் ஒரு தேர்தல் அவசியமா?என்று ஒரு நண்பர் கேட்டார்.கடந்த 15



மிகுதி 06 ஆம் பக்கத்தில்...

# 2024:வெற்றி ஆண்டா! தோல்வி ஆண்டா!



ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தமிழ்மக்களுக்கு எதைப் பெற்று தந்திருக்கின்றது? எதையுமே பெற்று தரவில்லை. அதற்கு அதன் தலைமைதான் காரண மா?ஒரு புதிய தலைமை கிடைத்துவிட் டால்,தமிழர சுக் கட்சி அதிசயங்களையும் அற்புதங் களையும் நிகழ்த்திவிடும் என்று எதிர்பார்க்கலாமா ? என்றும் அவர் கேட்டார்.

உண்மைதான். தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது நடப்பவை யாவும் கடந்த 15 ஆண்டுகாலத் தோல்வி யின் விளைவுகளே.அந்தத் தோல்விக்கு எல்லாரு மே கூட்டுப்பொறுப்பு.இப்பொழுது தலைமைப் பதவிக்காகப் போட்டியிடும் அனைவருமே அதற்குக் கூட்டுப்பொறுப்பு.தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள மிகப்பெரிய கட்சி அது என்ற அடிப்படையில், அக்கட்சியின் தோல்விதான் தமிழரசியலின் தோல்வியும் எனலாம்.அக்கட்சியின் எல்லா மூத்த தலைவர்களும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டும்.இவர்களில் யார் தெரிவு செய்யப்பட் டாலும் தமிழரசியலை வெற்றிப்பாதையில் செலுத்த முடியுமா?

யார் தலைவராக வந்தாலும் அவர்கள் முன் இரண்டு பெரிய பொறுப்புக்கள் உண்டு. முதலாவது பொறுப்பு, கடந்த 15 ஆண்டுகளாக உடைந்து உடைந்து சிறுத்துக் கொண்டு வரும் தமிழ் ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் ஐக்கியம் உடைந்து போனதற்கு தமிழரசுக் கட்சி தான் பெரும் பொறுப்பு. அக்கட்சி ஏனைய கட்சிகளை அவமதித்தது, அல்லது ஏனைய கட்சிகளுக்குள்ளால் தேர்தல் கேட்டு வெற்றி பெற்றவர்களை உருவி எடுத்துத் தன்னுடன் சேர்த்துக் கொண்டது. இவ்வாறு, தான் ஒரு பெரிய கட்சி என்ற அடிப்படையில் மூத்த கட்சி என்று அடிப்படையில்,அதற்குரிய பக்குவத்தோடு பெருந்தன்மையோடு தமிழரசுக் கட்சி நடந்து கொள்ளவில்லை.

தன்னுடைய பெயருக்குத்தான், தன்னுடைய சின்னதுக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிக் கிறார்கள் என்று தமிழரசுக் கட்சி நம்பியது. தான் ஒரு தும்புத் தடியை தேர்தலில் முன்னிறுத்தினாலும் மக்கள் கண்ணை மூடிக்கொண்டு வாக்களிப்பார் கள் என்று தமிழரசுக் கட்சி திமிரோடு நம்பியது.அத னால் ஏனைய பங்காளிக் கட்சிகள் தன்னுடைய பலத்தில்தான் கூட்டமைப்புக்குள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்றும் கருதியது.அதனால் பங்காளிக் கட்சிகளை அவமதித்ததுபுறக்கணித்தது ஒன்றாக இருக்க முடியாதபடி அவமானகரமான ஒரு சூழலை ஏற்படுத்தியது.விளைவாக, ஐக்கியம் உடைந்தது கூட்டமைப்பு சிதைந்தது. இப்பொழுது தமிழரசு கட்சிக்குள்ளேயே உடைவுகள் சிதைவுகள் உருவாகிவிட்டன.எனவே ஒரு மூத்த பழம்பெரும் கட்சியின் தலைவரா க வரப் போகும் ஒருவர் முதலில் உடைந்து சிதறிய ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதன்பின்,அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் அரசியல் இலக்கை வென்றெடுப்பதற்கான வழி வரைபடத்தை தயாரிக்க வேண்டும்.எல்லாருமே சாஸ்ரியைத்தான் கேட்கின்றார்கள். ஆனால் யாரிடமாவது சமஸ்ரியை அல்லது அதைவிட உயர் வான ஒரு தீர்வைப் பெறுவதற்கான வழிவரைபடம் உண்டா? தமிழரசுக் கட்சிக்கு ஆங்கிலப் பெயர் சமஸ்ரிக் கட்சி என்பதுதான்.ஆனால் செல்வநாய கம் காலத்தில் இருந்து இன்றுவரையிலும் 73 ஆண்டுகளாக சமஸ்ரியைப் பெற முடியவில்லை. கட்சியின் புதிய தலைமை அதற்குரிய வழிவரை படத்தை தெளிவாக முன்வைக்குமா?


அந்த வழிவரைபடத்தின் அடிப்படையில் தமிழரசி யலை வழிநடத்தத் தேவையான தகைமை கொள்ளளவுதியாக சிந்தைவிசுவாசம் போன்றன தமிழரசுக் கட்சிக்குள் உள்ள எந்தத் தலைவரிடம் உண்டு?அப்படி ஒரு தலைவரிடம் எல்லா தகமைக ளும் இல்லையென்றால், பல்வேறு வகைப்பட்ட ஆளுமைகள் இணைந்த இணைத்தலைமையை உருவாக்கலாம்.அதுதான் இப்போதிருக்கும் நடைமுறைச் சாத்தியமான ஒரே வழி.இது தொடர் பாக அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் ஏற்கனவே தமிழரசுக் கட்சிக்குக் கூட்டுத் தலைமை வேண்டும் என்று கூறியிருக்கிறார்.அதற்கு அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியை உதாரணமாக காட்டியிருக்கிறார்.தமிழர் விடுதலைக் கூட்டணிக் குள் வேறு வேறு கட்சிகள் இணைந்தன. அதனால் அக்கட்சிகளின் தலைவர்கள் கூட்டுத் தலைமையை ஏற்றுக் கொண்டார்கள்.ஆனால் தமிழரசுக் கட்சி ஒரே கட்சி.அங்கே ஒருவர் மற்றவரை விட தன்னை மேலானவராக கருத முற்பட்டதன் விளைவாகத் தான் போட்டோ போட்டிகள் ஏற்பட்டன. எனவே ஒரே கட்சிக்குள் இணைத் தலைமைகளை ஏற்றுக் கொள்வது என்பது உயர்ந்த பட்ச ஜனநாயகம் ஆகும். 2009 க்குப்பின் தோன்றிய தமிழ் மக்கள் பேரவையும் இணைத் தலைமைகளைக் கொண்டிருந்தது என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இணைத் தலைமையை ஏற்றுக்கொள்வது என்பது,தன்னிடம் இல்லாத தகுதி வேறு யாரிடமோ இருக்கிறது என்பதனை ஏற்றுக் கொள்வதுதான். சட்டப் புலமை,ஆங்கில அறிவு போன்ற தகுதிகள்



மிகுதி 07 ஆம் பக்கத்தில்...

# 2024:வெற்றி ஆண்டா! தோல்வி ஆண்டா!



நிலாந்தன்

மட்டும் தலைமை தாங்கப் போதுமானவை அல்ல.போராட்டப் பாரம்பரியமும் பலமான வாக்கு வங்கியும் மட்டும் தலைமை தாங்கப் போதுமான வையல்ல.2009க்குப் பின்னரான தமிழ்த் தலைமைகளுக்கு அதைவிடக் கூடுதலாக,பண்புரு மாற்றத்திற்குத் தேவையான தகமைகள் அதிகம் வேண்டும். பண்புருமாற்றம் என்பது கட்சித் தலைமையை கைப்பற்றுவதற்காக மற்றவர்களைச் சுதாகரித்துதமிழ்த் தேசிய முகமூடி அணிந்து நடிப்புக்கு உறவு பாராட்டுவது அல்ல.

ஆயதப் போராட்டம் ஒன்றுக்கு பின்னரான மிதவாத அரசியலுக்குத் தேவையான்பிராந்திய மற்றும் பூகோள நிலைமைகளைப் பொருத்தமாகக் கையாளத் தேவையான்புதிய தொழில்நுட்ப வளர்ச்சியை உள்வாங்கிபுதிய மாற்றங்களுக்கு தயாரான் தலைமைகளே தமிழ் மக்களுக்குத் தேவை. தமிழரசுக் கட்சி அதற்குத் தயாரா?

2023முடியும்போது காணாமல் போகச் செய்யப் பட்டவர்களுக்கான போராட்டம் 2500ஆவது நாளைக் கடந்திருக்கிறது.மயிலத்தமடுவில் மேச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் நூறாவது நாளைக் கடந்திருக்கிறது.சமஷ்ரிக் கட்சி அதாவது தமிழரசுக் கட்சி சமஸ்ரியை அடையத் தவறிய 73ஆவது ஆண்டு கடந்திருக்கிறது.புதிய ஆண்டு தமிழரசுக் கட்சியின் 74ஆவது தோல்வியாண்டாக அமையுமா?அல்லது,கடந்த ஒரு நூற்றாண்டு காலத் தோல்வியில் இருந்து கற்றுக் கொண்ட ஆண்டாக அமையுமா?

# ஜனாதிபதி யாழ் வருகை! எதிர்ப்பு போராட்டத்தை தடுக்கும் வகையில் 8 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல்!

யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விஜயம் செய்யவுள்ள நிலையில் அதற்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என கருதி எட்டு பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.யாழ்ப்பாணம் பொலிஸாரினால் செவ்வாய்க்கிழமை (02) குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்காக 04ம் திகதி முதல் 07ம் திகதி வரை விஜயம் செய்யவுள்ளார்.இந்நிலையில் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான போராட்டத்தை தடுக்கும் பொருட்டு தடை கட்டளை கோரி பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பித்துள்ளனர்.இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டினை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில், புதன்கிழமை(03) மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கட்டளையிட்டுள்ளது.பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் என 8 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் தடுப்பு விவகாரம்! ஜனாதிபதி வழங்கியுள்ள பணிப்புரை!



போதைப்பொருள் தடுப்பு, பாரிய கடத்தல் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை பின்பற்றுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.தேசிய போதைப்பொருள் தடுப்புக்கட்டளை பிரிவு என்ற படையை உருவாக்குவதற்கான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நீதி அமைச்சு ஆகியன இணைந்து சட்டத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு தேவையான அமைச்சரவைப் பத்திரத்தை உருவாக்கி, பாரியளவிலான கடத்தல்காரர்களைக் கைது செய்வதற்கான விசேட அதிகாரங்களைக் கொண்ட “தேசிய போதைப்பொருள் எதிர்ப்புக் கட்டளை“ பிரிவை உருவாக்க எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகின்றது.




# மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளம் அனர்த்தத்தினால் 7225 பேர் பாதிப்பு!!





மட்டக்களப்பு மாவட்டத்தில் வட கீழ் பருவப் பெயர்ச்சி மழை தொடராக பெய்து வருவதனால் கடந்த 48 மணித்தியாலங்களின் மாவட்டத்திலுள்ள குளங்கள், ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்ததுடன், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தால் நிறைந்துள்ளது.

கடந்த (01) திகதி பிற்பகல் இரண்டு மணியளவில் பெய்யத் தொடங்கிய மழை தொடர் மழையாக நேற்று (02) திகதி காலை ஆறு மணியளவில் ஓய்ந்தது. கடந்த 24 மணித்தியால காலப்பகுதியில் மாவட்டத்தில் மாத்திரம் 164.9 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

இதனால் மாவட்டத்தின் மண்முனை வடக்கு, காத்தான்குடி, கோரளைப்பற்று வடக்கு, மண்முனை தென் தென்மேற்கு பட்டிப்பளை, போரதீவுப் பற்று வெல்லாவெளி மற்றும் எறாவூர்பற்று போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததுடன் பெரும்பாலான வீதிகளும் வெள்ள நீரால் நிறைந்துள்ளன.

இதேவேளை மாவட்டத்தில் காத்தான்குடி பிரதேசத்தில் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தால் நிறைந்துள்ளதுடன் 1231 குடும்பங்களும் 4218 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 34 குடும்பங்களின் 109 பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த (01) காலை 8.30 மணியிலிருந்து நேற்று (02) நண்பகல் 12.30 வரையான காலப்பகுதியில் ஏறாவூர்பற்று கரடியனாறு, வந்தாறுமூலை, சித்தாண்டி போன்ற இடங்களில் 443 குடும்பங்களின் 1993 நபர்களும், வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவில் 117 குடும்பங்களின் 598 பேரும், நாவற்குடா, பாரதி புறம் மற்றும் ஜெயந்தி புறம் பகுதிகளில் 59 குடும்பங்களில் 168 நபர்களும், கதிரவெளி 213 பகுதியில் 47 குடும்பங்களின் 139 நபர்களுமாக, மாவட்டத்தில் மொத்தம் 1985 குடும்பங்களில் 7285 நபர்களும் பாதிக் கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அத்துடன் கிரான் புலி பாய்ந்தகல் மற்றும் கின்னயடி பிரம்படித்தீவு, ஈரலகுளம், மயிலவட்டுவான், வாகரை கல்லரிப்பு பகுதிகளுக்குச் செல்லும் பாதை முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அங்கு படகு சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

இவர்களில் 28 குடும்பங்களின் 82 நபர்கள் மண்முனை வடக்கு நாவற்குடா சாரதா வித்தியாலயம், மெதடிஸ் பாலர் பாடசாலை மற்றும் கதிரவெளி விக்னேஸ்வரா பாடசாலை ஆகிய தற்காலிக இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# உடப்புசல்லாவை சகோதரர்கள் இருவர் பருத்தித்துறையில் சடலமாக மீட்பு!



## தீயில் கருகிய நிலையில்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை முனைப் பகுதியில் களஞ்சியசாலையொன்றில் தீப்பற்றி இருவர் உயிரிழந்துள்ளமை தொடர்பாக பருத்தித்துறை நீதவான் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டார். குறித்த சம்பவம் செவ்வாய்க்கிழமை(02) அதிகாலை வேளை கடற்றொழில் உபகரண களஞ்சியசாலையில் இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது, புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இருவரும் களஞ்சியசாலையில் சென்று கதவை பூட்டி விட்டு நித்திரைக்கு சென்றபோதே அதிகாலை 12.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து அருகில் இருந்தவர்கள் தீயை அணைக்க முற்பட்டபோதும், களஞ்சியசாலையில் உறக்கத்தில் இருந்த இருவரும் உடல் கருகி பலியானதுடன் அங்கிருந்த பொருட்களும் தீயில் எரிந்ததால் அருகில் இருந்த வாகன தரிப்பிடத்திலும் தீப்பரவி சேதமடைந்தது. **மலையகத்தின் உடப்புசல்லாவ பிள்ளையார் லோமன் தோட்டத்தைச் சேர்ந்த சகோதரர்களான வேலாயுதம் புவனேஸ்வரம் என்ற 46 வயதானவரும் வேலாயுதம் ரவி என்கிற 38 வயதானவருமே உயிரிழந்துள்ளனர்.** களஞ்சியசாலையில் இருந்த சிலிண்டர் தீ விபத்துக்கு காரணமாக இருக்குமா என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். தீப்பற்றியமைக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை நீதவான் பொன்னுத்துரை கிரிஷாந்தன், தடயவியல் பொலிஸார், பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.-






**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும் வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள், உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME

# உலகத் தமிழர் பேரவையின் ”இமயமலைப் பிரகடனம்” அமரபுர நிகாயவினால் நிராகரிப்பு

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட உலகத் தமிழர் பேரவை (GTF) மற்றும் அமரபுர நிக்காயவின் அனுநாயக்க தேரர் உள்ளிட்ட பௌத்த தேரர்கள் குழு தொகுத்த ”இமயமலைப் பிரகடனம்” என்ற ஆவணம் இலங்கை அமரபுர மகா சங்க சபையின் கருத்து அல்லவென அந்த சங்க சபையின் உதவிப் பதிவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில், கடந்த வருடம் டிசம்பர் 8ஆம் திகதி, உலகத் தமிழர் பேரவை மற்றும் பௌத்த பிக்குகளை சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அந்த பேரவை, சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பைப் பிரதிநிதித்தவப்படுத்தி, அமரபுர நிகாயவின் அம்பகஹபிட்டிய பிரிவின் அனுநாயக்க மாதம்பாகம அஸ்ஸஜிதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட தேரர்கள் இணைந்து உருவாக்கிய, அச்சமோ சந்தேகமோ இன்றி, அனைவரும் பெருமையுடனும், நம்பிக்கையுடனும், சம உரிமையுடனும் அமைதியாக வாழக்கூடிய இலங்கையைப் பற்றிய “இமயமலைப் பிரகடனத்திற்கு” உற்சாக வரவேற்பு அளித்தார்.



ශ්‍රී ලංකා අමරපුර මහා සංඝ සභාව

Assembly of Amarapura Buddhist Monks in Sri Lanka

011-2587050

mahasangasabaamarapura@gmail.com

2023.12.30

மகாநாயக்க தேரர்கள் மற்றும் பொதுமக்களின் தகவலுக்காக எனக் குறிப்பிட்டு, டிசம்பர் 30, 2023 அன்று, இலங்கை அமரபுர மகா சங்க சபையின் உதவிப் பதிவாளர் அம்பலன்கொட சுமேதானந்த தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இமயமலைப் பிரகடனம் இலங்கை அமரபுர மகா சங்க சபையால் அங்கீகரிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

“இமயமலைப் பிரகடனம் தொடர்பாக இலங்கை அமரபுர மகா சங்கத்தில் எந்த உடன்பாடோ அல்லது விவாதமோ இடம்பெறவில்லை. அது ஒரு சில தேரர்களின் தனிப்பட்ட கருத்தின் வெளிப்பாடு மாத்திரமே என இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.”

2008இல் குறைந்தது 40,000 மரணங்கள் மற்றும் 20,000 நிராயுதபாணிகள் காணாமல் ஆக்கப்பட்ட, யுத்தத்திற்கு தலைமை தாங்கிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பு என்ற பெயரிலான அமைப்பின் தேரர்கள் மற்றும் உலகத் தமிழர் பேரவையை சந்தித்ததோடு, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களும் இமயமலை பிரகடனத்தை ஏற்றுக் கொண்டிருந்தன. ”இமயமலை பிரகடனம்” என்ற ஆவணம் ஏற்கனவே இலங்கைத் தமிழர்களாலும் பல புலம்பெயர் தமிழ் குழுக்களாலும் கடுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு, கூட்டு இமயமலைப் பிரகடனத்தை கையளித்த விடயத்தை ஜனாதிபதி ஊடகப் பிரிவு, ”இணக்கமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இலங்கைக்கான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை உருவாக்குவதில் ஒரு முக்கியமான முன்னேற்றம்.” எனக் குறிப்பிட்டிருந்தது.

எவ்வாறாயினும், உலகத் தமிழர் பேரவை மற்றும் பௌத்த பிக்குகளால் முன்வைக்கப்பட்ட கூட்டு இமயமலைப் பிரகடனம் குறித்து தமக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளதாக, அமைச்சின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி, உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. கூட்டுப் பிரகடனத்தை கையளிப்பதற்காக, சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பைப் பிரதிநிதித்தவப்படுத்தி, அமரபுர நிகாயவின் அம்பகஹபிட்டிய பிரிவின் அனுநாயக்க வண. மாதம்பாகம அஸ்ஸஜிதிஸ்ஸ தேரர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நீதித்துறை சங்க நாயக்க வண. சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர், மேல் மாகாணத்தின் பிரதான சங்க நாயக மற்றும் ஸ்ரீ தர்மரக்ஷித பிரிவின் பதிவாளர் வண. கிதலகம ஹேமசார தேரர், வஜிரவங்ச பிரிவின் பதில் மகாநாயக்க பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் மனித அபிவிருத்தி ஆய்வு மையத்தின் தலைவருமான வண, களுபஹன பியரதன தேரர், மத்திய மாகாணத்தின் பாததும்பர பிரதம சங்க நாயக வண. நாரம்பனாவே தம்மாலோக தேரர், ராமன்ய நிகாயவின் பிரதிப் பதிவாளர் வாந்துவே தம்மவங்ச தேரர்கள் ஆகியோர் பங்கேற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இ.கி.மி சமைத்த உணவு வழங்கல்!




மட்டக்களப்பு கல்லடி விவேகானந்தபுரத்தில் கனமழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் ஒரு தொகுதி சமைத்து உணவை நேற்று(2) செவ்வாய்க்கிழமை பகல் வழங்கியது .இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னின்று அந்த சமைத்த உணவுகளை மக்களுக்கு வழங்கி வைத்தார் .சுமார் 150 குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# காரைதீவு- மாவடிப்பள்ளி வீதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது: மக்கள் இல்லங்களை விட்டு வெளியேறினர்.




காரைதீவு மாவடிப்பள்ளி வழியாக அம்பாறை செல்லும் பாதை வெள்ளத்தினால் மூழ்கி போக்குவரத்து ஸ்தம்பிதமாகியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழைகாரணமாக பெரிய பாலத்திற்கும் சின்ன பாலத்திற்கும் இடையில் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இன்னும் மழைபெய்தால் முற்றாக போக்குவரத்து தடைப்படும் அபாயம் உள்ளது.
மட்டுமின்றி தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாக வயல்நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி நீர் நிலைபோன்று காட்சியளிப்பதுடன் வீதி ஓரங்களில் மீன்பிடி நடவடிக்கையில் பொதுமக்கள் ஈடுபட்டுவருவதையும் காணக்கூடியதாக உள்ளதுடன் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தின் வீடுகள் பலதும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் கிராம மக்களில் சிலரும் தமது வீடுகளிலிருந்து வெளியாகி பாதுகாப்பான இடங்களை நோக்கியும், உறவினர்களின் வீடுகளுக்கும் சென்றுள்ளனர்.
வெள்ளநீர் தேங்கியமையால் கல்முனை - அக்கரைப்பற்று காபட் வீதிகள் குண்டும் குழியுமாக மாறியுள்ளதுடன் வாகன போக்குவரத்திற்கும் இடைஞ்சலாக மாறியுள்ளதை அவதானிக்க முடிகிறது.




# தமிழ் மொழியின் பெருமையை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை! மோடி சூளுரை



தமிழ் மொழியின் பெருமையை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை என்றும், தமிழ் பண்பாட்டை பற்றி பேசாத நாளே இல்லை எனவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன முனையத்தை மக்கள் பயன்பாட்டுக்கு பிரதமர் மோடி திறந்து வைத்தார். இந்த விழாவில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

**புத்தாண்டு வாழ்த்துகள்**

இதன்போது வணக்கம், எனது தமிழ் குடும்பமே, முதலில் உங்கள் அனைவருக்கும் 2024 புத்தாண்டு நல்வாழ்த்துகள்." என தமிழில் கூறி பிரதமர் மோடி பேச்சை துவக்கினார்.

மேலும், இந்த ஆண்டில் எனது முதல் நிகழ்ச்சி தமிழகத்தில் நடப்பதை பாக்கியமாக கருதுகிறேன். தமிழ் மொழியின் பெருமையை கூறாமல் என்னால் இருக்க முடியவில்லை.

**தமிழ் பண்பாடு**

உலகின் எந்த இடத்திற்கு சென்றாலும் தமிழ் மொழியை புகழாமல் நான் இருந்ததில்லை.எனக்கு பல தமிழ் நண்பர்கள் இருக்கிறார்கள், அவர்களிடம் இருந்து தமிழ் பண்பாட்டை அறிகிறேன். தமிழ் பண்பாட்டை பற்றி பேசாத நாளே இல்லை.தமிழ் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்கு உள்ளது. காசி தமிழ் சங்கமம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் தமிழை கொண்டு செல்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

